**செய்தி வெளியீடு எண்: 332** **நாள்: 21.06.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.6.2013 அன்று தலைமைச் செயலகத்தில், திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் 1 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வட்டார போக்குவரத்து அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், புதிதாகக் கட்டப்பட்டுள்ள செங்குன்றம் வட்டார போக்குவரத்து அலுவலகக் கட்டடம், ஐந்து புதிய வட்டார போக்குவரத்து அலுவலகங்கள், ஐந்து புதிய பகுதி அலுவலகங்கள் மற்றும் இரண்டு புதிய ஓட்டுநர் தேர்வு தளங்கள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

வாகனங்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழ்நிலையில், ஓட்டுநர் உரிமங்கள் பெறுதல், புதிய வாகனங்களைப் பதிவு செய்தல், வாகன வரி செலுத்துதல் போன்ற பல்வேறு பணிகளுக்காக பொதுமக்கள் போக்குவரத்து அலுவலகங்களை அதிக அளவில் நாடி வருகிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, புதிய போக்குவரத்து அலுவலகங்களை ஏற்படுத்துவதிலும், ஏற்கெனவே உள்ள போக்குவரத்து அலுவலகங்களில் பொதுமக்களுக்கு அதிக வசதிகளை அமைத்துக் கொடுப்பதிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது.

அந்த வகையில், திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில், பொதுமக்கள் வசதிக்காக காத்திருப்பு அறை, மோட்டார் வாகன ஆய்வாளர் அறை, பழகுநர், ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறை, கணினி அறை போன்ற பல்வேறு வசதிகளுடன் 1 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடத்தையும், திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்தில் 1 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், பொதுமக்கள் போக்குவரத்துத் துறை தொடர்பான தங்களின் தேவைகளை தத்தமது பகுதிகளுக்கு அருகிலேயே உள்ள அலுவலகத்தில் நிறைவேற்றிக் கொள்ள ஏதுவாக, திருச்சிராப்பள்ளி மற்றும் நாமக்கல் வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைப் பகுதிகளுக்குள் கூடுதலாக முறையே திருச்சிராப்பள்ளி (கிழக்கு) மற்றும் நாமக்கல் (தெற்கு)

ஆகிய இரண்டு புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்; பூவிருந்தவல்லி, சங்கரன்கோவில், உளுந்தூர்பேட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த மூன்று பகுதி அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாகத் தரம் உயர்த்துதல் என மொத்தம் **2** கோடியே **50** லட்சத்து **67** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து புதிய வட்டார போக்குவரத்து அலுவலகங்கள்;

திருப்பத்தூர், சூலூர், முசிறி, சீர்காழி மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய ஐந்து இடங்களில் மொத்தம் **1** கோடியே **40** லட்சத்து **85** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பகுதி அலுவலகங்கள்;

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் **34** லட்சத்து **90** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம் குளித்தலையில் **20** லட்சத்து **58** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஓட்டுநர் தேர்வு தளங்கள்;

என மொத்தம் **2** கோடியே **92** லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான போக்குவரத்துத் துறை அலுவலகங்களைத் துவக்கி வைத்ததுடன், **4** கோடியே **47** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் போக்குவரத்துத் துறைக்கான பல்வேறு புதிய கட்டடங்கள் மற்றும் தேர்வு தளங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **20.6.2013** அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், போக்குவரத்துத் துறையின் களப் பணிகள் மற்றும் செயலாக்கப் பணியை சிறப்பாக மேற்கொள்ளவும், அதிக எண்ணிக்கையிலான வாகனத் தணிக்கை மேற்கொள்ளவும், விபத்து வாகனங்களை விரைந்து கள ஆய்வு செய்ய ஏதுவாகவும் **49** பகுதி அலுவலகங்கள் மற்றும் **5** வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு **2** கோடியே **97** லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட **54** புதிய ஜீப்புகளை போக்குவரத்து துறையின் அலுவலகப் பயன்பாட்டிற்காக **20.6.2013** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத் துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 21.6.2013